அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 143/2017
தேதி : 24.11.2017

## தற்கொலை செய்து கொள்ளுதல் என்பது கோழைத்தனமானது என்று சொல்வதைப்போன்று, தற்கொலைக்குத் தூண்டுதல் என்பதும் கொடூரமானதாகும்.

### அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

மக்களில் பலதரப்பட்டவர்கள், பல்வேறு சூழ்நிலைகளில்,தற்கொலை செய்துகொண்டதாக வரும் செய்திகள் மனதில் வேதனையை அளிப்பதாக உள்ளன. இவற்றில் மிகவும் அதிர்ச்சி அளிப்பவை, சமீப காலங்களில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் தற்கொலை செய்துகொள்வதாக வரும் செய்திகள்தாம்.

காதல் தோல்வி, தேர்வில் தோல்வி, மதிப்பெண் குறைவு, பெற்றோர் திட்டியது, பாலியல் கொடுமை போன்ற பல காரணங்கள் மாணவ மாணவிகளின் தற்கொலைக்கான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

சில தினங்களுக்கு முன், பல்கலைக் கழகம் ஒன்றில், தேர்வு எழுதும்போது ஒரு மாணவி காப்பி அடித்ததால் ஆசிரியர் கண்டித்ததையடுத்து மனமுடைந்து அந்த மாணவி தற்கொலை செய்துகொண்டதும்,தொடர்ந்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டதும் அதிர்ச்சியும், வேதனையும் அளித்த சுவடு நீங்குவதற்குள், இன்று, அரக்கோணம் அருகே நான்கு பள்ளி மாணவிகள் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம், மேலும் அதிர்ச்சியை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதற்கும் காரணம், ஆசிரியர் திட்டியதால்தான் என்றே சொல்லப்படுகிறது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



மாணவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுத்து, தேர்ச்சிபெற வைப்பதோடு ஆசிரியர்களின் கடமை முடிந்துவிடுவதில்லை. அவர்களுக்கு வாழ்க்கைக் கல்வியையும், மனவளக் கலைகளையும் கற்றுத்தர வேண்டும். தவறுகளைப் பக்குவமாக சுட்டிக்காட்டி, அவர்கள் மீண்டும் தவறிழைக்காத வகையில், அவர்களை நெறிப்படுத்த வேண்டும். அவர்களை மனம் திருந்தவைக்கவேண்டும். பெற்றோர்களையடுத்து, மாணவர்களை பொறுப்புள்ள குடிமக்களாக உயர்த்தவேண்டிய பொறுப்பு ஆசியர்களுக்கும் உண்டு.

பாடத்திட்டத்தில் உளவியல் சார்ந்த பாடங்களையும், நீதிபோதனை வகுப்புகளைப்போன்று மனவியல் நிபுணர்களின் கலந்தாய்வு வகுப்புகளையும் சேர்ப்பது குறித்தும் அரசு பரிசீலிக்கவேண்டும்.பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் போக்கு மற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்து நல்ல நண்பர்களாக அவர்களோடு இணைந்திருக்க வேண்டும்.இதுபோன்ற தொடர் நடவடிக்கைகளே மாணவ சமுதாயம் தற்கொலைக்குத் தள்ளப்படுவதைத் தவிர்க்க உதவும்.

மேலும் ஊடகங்கள் குறிப்பாக தொலைக்காட்சிகள், இதுபோன்ற சம்பவங்களை திரும்பத்திரும்ப காண்பிப்பதால், மனம் பலவீனமான மாணவர்களையும் தற்கொலை ஒன்றுதான் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு என்ற மனநிலையை ஏற்படுத்திவிடும் வாய்ப்பு உண்டாகலாம்.எனவே இதுபோன்ற செய்திகளை மிகவும் ஆழமாக, பலமுறை ஒளிபரப்புவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தற்கொலைச் சம்பவங்களில் உயிரிழந்த மாணவிகளின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com